# கத்திரி மற்றும் வெண்டை விலை முன்னறிவிப்பு

## கத்திரி

வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் மதிப்பின் படி, கத்திரி சாகுடி 2015-16 ஆம் ஆண்டு இந்தியாவில் 6.48 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 123.03 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த நிலப்பரப்பில் காய்கறிப்பயிர் மட்டும் 94.65 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 1685.05 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இதில் கத்திரி மட்டும் 53.88 சதவீதம் பயிரிடப்படுகிறது. மேற்கு வங்காளம், குஜராத், நாகலாந்து, சத்தீஸ்கர், மற்றும் பீகார் ஆகியவை கத்திரி பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தேசிய தோட்டக்கலை வாரியத்தின் கூற்றுப்படி 2014-2015 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கத்திரி சாகுபடி 0.11 இலட்சம் ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 1.05 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. திண்டுக்கல், கோயம்புத்தூர், தர்மபுரி, சேலம், தேனி, புதுக்கோட்டை, வேலூர், திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் கத்திரி அதிகளவில் பயிரிடப்படுகிறது. கோயம்புத்தூர் சந்தைக்கு கத்திரியின் வரத்து அதிகளவில் அதன் சுற்று வட்டாரத்தில் இருந்து வந்து கொண்டிருகிறது. வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தற்போது கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் சந்தைகளிடமிருந்து அதிகளவில் வரத்து வந்து கொண்டு இருப்பதாலும் சமூக பண்டிகை காலங்கள் தொடர்ந்து வருவதாலும் நவம்பர் மற்றும் டிசம்பர் (2016) மாதங்களில் கத்திரிக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

விலை விவரம் மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், கோயம்புத்தூரில் கத்திரியின் பண்ணை விலை அறுவடை சமயத்தில் கிலோவிற்கு ரூ. 20 முதல் ரூ.23 ஆக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## வெண்டை

இந்தியாவில் வெண்டை முக்கிய காய்கறிப் பயிராக **2015-16**-ல் **5.04** லட்சம் எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு **53.06** லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் அதிகளவில் வெண்டை பயிரிடப்படும் மாநிலமாக மேற்கு வங்காளம் **(8.82** இலட்சம் டன் உற்பத்தி**)** முன்னிலை வகிக்கின்றது. அதை தொடர்ந்து குஜராத், ஆந்திர பிரதேசம், பீகார் மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்கள் வெண்டை உற்பத்தியில் முக்கிய பங்கு வகுக்கிறது. தமிழகத்தில் **2014-15**-ல் வெண்டை சாகுடி **0.08** லட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு **0.56** லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. திண்டுக்கல், கோயம்புத்தூர், சேலம், வேலூர், காஞ்சிபுரம் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் வெண்டை உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றது. ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் சந்தைகளில் வரத்து நவம்பர் மாதம் வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறைவான மழையின் காரணமாக வெண்டையின் உற்பத்தி குறைந்து காணப்படுவதால் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் நடவு முடிவுகளை எடுக்க ஏதுவாக கடந்த **13** ஆண்டுகளாக ஒட்டன்சத்திரம் மற்றும் கோயம்புத்தூர் உழவர்சந்தைகளில் நிலவிய வெண்டை விலையை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்பு திட்டம், சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. இதன் அடிப்படையில், அறுவடை சமயத்தில், அதாவது நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வெண்டையின் பண்ணை விலையானது கிலோவிற்கு ரூ.**18** முதல் ரூ.**20** வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனைப்படி நடவு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

*உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்*

*வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர்-641 003*

*தொலைபேசி- 0422-2431405*

**<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>**

*பேராசிரியர் மற்றும் தலைவர்*

*காய்கறிப் பயிர்கள் துறை*

*தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்*

*கோயம்புத்தூர் - 641 003.*

*தொலைபேசி எண் - 0422-6611374, 0422- 6611283*